நிலையங்களை அமைக்க வேண்டுமென்று நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே வியன்னன்னூரிலே துணை மின் நிலையம் அமைப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் இந்தப் பணி துவங்கப்படும். 1995-96-க்குள் இந்தத் துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பு நடேசன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். *(குறுக்கீடு).*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்பு நடேசன், நீங்கள் கேட்டது 'டிரான்ஸ்பார்மர்' வேண்டுமென்று. அதற்குப் பிறகு, துணை மின் நிலையத்தையும் கொடுத்து விட்டார். இன்னும் என்ன கேள்வி?. *(குறுக்கீடு)* சரி, திரு. அப்பு நடேசன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு எது எது தேவை என்று தெரிந்து, அந்தந்தச் சமயத்திலே செய்யக்கூடிய இந்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 49, திருமதி பி. நிர்மலா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

49—

திண்டுக்கல்லில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டுதல்

35955*—திருமதி பி. நிர்மலா:**

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திண்டுக்கல்லில் புறநகர்த் திட்டப்பகுதியில், வீட்டுவசதி வாரியம், இதுவரை பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. மேலும், தற்போது 280 வீடுகளை ரூ. 378.62

1995 மார்ச் 17]

இலட்சம் மதிப்பீட்டில் சுயநிதித் திட்டத்தின் கீழ் கட்டுவதற்கான திட்டம் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு தமிழகத்திலே பல்வேறு துறைகள் சிறப்பாக விளங்குவதைப்போல வீட்டுவசதி வாரியமும் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறது. திண்டுக்கல்லைப் பொறுத்தவரையில், சொல்லப்போனால் 4, 5 சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே குடியிருந்து கொண்டிருக்கிறோம். சகோதரர் பழனி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.எம். துரை, வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் . . . . . (குறுக்கீடு)

திரு. ஆ. சுப்புரத்தினம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பழனியில் குடியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பி. நிர்மலா, திரு. ஆ. சுப்புரத்தினம் பழனியில் குடியிருக்கிறேன் என்கிறார்.

திருமதி பி. நிர்மலா: பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பிறந்த ஊர் திண்டுக்கல், திண்டுக்கல்லிலும் இருக்கிறார், பழனியிலும் இருக்கிறார். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி பி. நிர்மலா, உங்கள் தொகுதிக்கு வேண்டியதைக் கேளுங்கள்.

திருமதி பி. நிர்மலா: பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறாகச் சொல்லவில்லை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கே குடியிருக்க விரும்புவதுபோல, மக்களும் விரும்புகிறார்கள். ஆகையால், அதிகப்படியான வீடுகள் வேண்டும் என்பதற்காகத்தான் கேட்டேன். அமைச்சர் அவர்களும் சில திட்டங்களைத் தீட்டி இருப்பதாகவும், அதைச் செய்து தருவதாகவும் கூறியிருக்கிறார்கள். அதற்காக நன்றி சொல்வதற்கு முன்னால் இதை நான் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொன்னேனே தவிர, வேறு தவறான கருத்து ஒன்றையும் கூறவில்லை என்பதை சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆ. சுப்புரத்தினம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அமைச்சர் அவர்களுக்கும், இதய தெய்வம் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்.